# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு
# தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2026

## தனித்தேர்வர்களுக்கான தேர்வு நெறிமுறைகள் *

### 01. தேர்வு முறைகள்

வளர்தமிழ் - 1 தொடக்கம் வளர்தமிழ் - 12 வரையான மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வுடன் புலன்மொழிவளத் தேர்வும் நடைபெறும். இரண்டு தேர்வுகளுக்கும் தோற்றும் நிலையிலேயே தமிழ்மொழிப் பொதுத்தேர்வு முழுமையடைகிறது.

**வளர்தமிழ் 1 தவிர்ந்த, ஏனைய வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் அதற்கு முன்னைய வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

**புலன்மொழிவளத் தேர்வு :**

புலன்மொழிவளத் தேர்வு பின்வருமாறு அமையும்.

- வளர்தமிழ் - 1 தொடக்கம் 10 வரை : கேட்டல், பேசுதல், வாசித்தல்
- வளர்தமிழ் - 11, 12 : பேசுதல், வாசித்தல்.

**புலன்மொழிவளத் தேர்வு நாட்கள்**

- 02-05-2026 சனிக்கிழமை
- 03-05-2026 ஞாயிற்றுக்கிழமை
- 10-05-2026 ஞாயிற்றுக்கிழமை

விண்ணப்பிக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த மூன்று நாட்களில் ஏதாவது ஒரு நாள் புலன்மொழிவளத் தேர்விற்காக தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் ஒதுக்கப்படும்.

**ஒதுக்கப்பட்ட புலன்மொழிவளத் தேர்வு நாள், நேரம், இடம் என்பவற்றில் எதுவித மாற்றமும் செய்ய முடியாது.**

**எழுத்துத்தேர்வு**

**06-06-2026 சனிக்கிழமை**

வளர்தமிழ் 1 தொடக்கம் 12 வரையான மாணவர்களுக்கு ஒரே நாளில் வேறுபட்ட நேரங்களில் எழுத்துத் தேர்வு நடைபெறும். தேர்வு நேரம், இடம் தொடர்பான தகவல் உரியகாலத்தில் தேர்வு ஒப்புதல் அட்டையூடாக அறிவிக்கப்படும்.

### 02. விண்ணப்ப முடிவு நாள்

**18-01-2026 சனிக்கிழமை**

### 03. தேர்வுக் கட்டணம்

| | |
|---|---|
| வளர்தமிழ் 1 தொடக்கம் 4 வரை | **45 €** |
| வளர்தமிழ் 5 தொடக்கம் 12 வரை | **55 €** |

### 04. விண்ணப்பப் படிவத்தைப் பெறுதலும், நிரப்புதலும்

**04-அ. தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2025 இல் தனித்தேர்வராக விண்ணப்பித்தவர்களுக்கு :**

தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2025இல் சித்தியடைந்தவர்களுக்கு, அதற்கான சான்றிதழுடன் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2026 இற்கான விண்ணப்பப்படிவமும் அவரவர் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதேபோல், தேர்விற்குத் தோற்றத் தவறிய, சித்தியடையாத மாணவர்களுக்கும் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2026 இற்கான விண்ணப்பப்படிவம் அவரவர் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவர்கள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவத்தில் பெயர் மற்றும் தகவல்களைக் கவனமாகச் சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் சிவப்பு எழுதுகோலினால் திருத்தி, இம்முறை தோற்றவுள்ள வகுப்பினை உறுதிப்படுத்தி, கட்டணம் செலுத்தும் முறை பற்றிய தகவல்களையும் குறிப்பிட்டுக் கையொப்பங்களை இடுதல் வேண்டும்.

**04-ஆ. முதன்முறையாகத் தனித்தேர்வராக விண்ணப்பிப்பவர்களுக்கு :**

தேர்வு விண்ணப்பப்படிவத்தை எமது பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது **www.tamoulcholai.fr** என்ற எமது இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். தேர்வு விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள தகவல்களை **நீலம் அல்லது கறுப்பு எழுதுகோலினால் தெளிவாக,** நிரப்பி மாணவரின் அண்மைய ஒளிப்படத்தை ஒட்டி, மாணவரின் அகவையை உறுதிசெய்ய பிறப்புச்சான்றிதழ் அல்லது அடையாள ஆவணம் ஒன்றின் பிரதியையும் இணைத்தல் வேண்டும்.

## 05. விண்ணப்பங்களை அனுப்புதல்

விண்ணப்பங்களை எமது பணியகத்தில் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது அஞ்சலூடாகவும் அனுப்பலாம். நேரடியாக ஒப்படைப்பதாயின் பணியக நேரத்தினைக் கவனத்திற்கொள்ளவும். தேர்வுக்கட்டணத்தைக் காசு, காசோலை அல்லது வங்கியட்டை ஊடாகச் செலுத்தலாம்.

அஞ்சலூடாக அனுப்புவதாயின் **TAMOULCHOLAI ASSOCIATION** எனும் பெயரில் கட்டளையிடப்பட்ட காசோலையினையும் **தங்கள் முகவரியிடப்பட்டு அஞ்சல் முத்திரை (20g) இணைக்கப்பட்டுள்ள கடிதவுறையினையும் இணைத்து** அனுப்பவும். அஞ்சலூடாக விண்ணப்பம் கிடைக்கப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

**நெறிமுறைகளை நிறைவுசெய்யாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

## 06. தேர்வு ஒப்புதல் அட்டை

புலன்மொழி வளத்தேர்வு, எழுத்துத் தேர்வு ஆகியவற்றுக்கான தனித்தனி ஒப்புதல் அட்டைகள் **17-04-2026 இற்கு முன் கிடைக்கக் கூடிய வகையில்** அவரவர் முகவரிக்கு எம்மால் அனுப்பி வைக்கப்படும். **அஞ்சலூடான காலதாமதங்களுக்கும் தொலைந்துபோதல்களுக்கும் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் பொறுப்பேற்கமாட்டாது.** 17-04-2026 இற்குள் தேர்வு ஒப்புதல் அட்டை கிடைக்கவில்லையெனின், எமது பணியகத்துடன் தொடர்புகொள்ளல் வேண்டும். ஒப்புதல் அட்டையின் நகல் வழங்கப்படும்.

## 07. தேர்வுக் குறிப்பேடு

தமிழ்மொழிப் பொதுத்தேர்விற்கு முதன்முறையாக விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்களுக்குரிய தேர்வுக் குறிப்பேட்டினை எமது பணியகத்தில் விண்ணப்பிக்கும் வேளையில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது புலன்மொழிவளத் தேர்வு மண்டபத்திலும் பெற்றுக்கொள்ளலாம். இக்குறிப்பேட்டினை வளர்தமிழ்-12 தேர்வினை நிறைவுசெய்யும் வரை பாதுகாத்துப் பயன்படுத்துதல் வேண்டும். தேர்வுக் குறிப்பேட்டிற்கான கட்டணம் இரண்டு யூரோக்கள் (2€).

## 08. தேர்விற்கான சீருடை

தேர்வுகளின் போது தேர்வர்கள் தமிழ்ச்சோலைச் சீருடை **(கறுப்புநிற நீளக்காற்சட்டையும் தனிவெள்ளை மேற்சட்டையும்)** அணிந்திருத்தல் கட்டாயமாகும்.

## 09. தேர்வு மண்டப நடைமுறைகள்

புலன்மொழிவளத் தேர்விற்கு **30 மணித்துளிகள்** முன்னதாகவும், எழுத்துத் தேர்விற்கு **45 மணித்துளிகள்** முன்னதாகவும் தேர்வு ஒப்புதல் அட்டை மற்றும் தேர்வுக் குறிப்பேட்டுடன் மண்டபத்திற்கு வருகைதந்திருத்தல் வேண்டும்.

எழுத்துத்தேர்வுகள் தொடங்கி **30 மணித்துளிகளுக்கு மேல் தாமதமாக வரும் மாணவர்கள்** தேர்விற்குத் தோற்ற ஒப்புதலளிக்கப்படமாட்டார்கள்.

## 10. தேர்விற்கு மாணவர்களை அணியஞ்செய்தல்

தேர்வுகள் யாவும் வளர்தமிழ் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், இறுவெட்டுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். தேர்விற்கு மாணவர்களை அணியஞ்செய்தற் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களை எமது இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம். அல்லது எமது பணியகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

## 11. தேர்வுப் பெறுபேறுகள்

தேர்வுப் பெறுபேறுகள் 31-08-2026 இற்கு முன் தங்களுக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பிவைக்கப்படும். இப்பெறுபேறுகள் தொடர்பாக **'மீளாய்வு விண்ணப்பம்' [த.தே.-26-11(உ)]** எனும் படிவமூடாக 30-09-2026 இற்கு முன் மீளாய்விற்கு விண்ணப்பிக்க முடியும். மீளாய்வுக் கட்டணம் ஒரு மாணவருக்கு 30€. மீளாய்வுப் பெறுபேறு 31-10-2026 இற்கு முன் அனுப்பிவைக்கப்படும். மீளாய்வுப் பெறுபேற்றில் மாற்றம் இருப்பின் மீளாய்வுக் கட்டணம் மீளளிக்கப்படும்.

## 12. தேர்வுச் சான்றிதழ்கள்

தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள், தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2027 இற்கான விண்ணப்பப்படிவத்துடன் 13-12-2026 இற்கு முன் கிடைக்கக்கூடியவகையில் அனுப்பிவைக்கப்படும். தேர்வுக்குத் தோற்றத்தவறியவர்களுக்கும் சித்தியடையாதவர்களுக்கும் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2027 இற்கான விண்ணப்பப்படிவம் மட்டும் அனுப்பிவைக்கப்படும்.

**TAMOULCHOLAI ASSOCIATION**

**165 boulevard de la Villette, 75010 Paris.**

**09 84 06 38 83 tamoulcholai@yahoo.fr www.tamoulcholai.fr**

பணியக நேரம் : புதன்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை 14.30 தொடக்கம் 19.30 வரை

# ASSOCIATION TAMOULCHOLAI-
## EXAMENS DE LANGUE TAMOULE–2026

## Règlement des examens pour les candidats libres *

### 01. Modalités d'examen

Les élèves de tamoul du niveau 1 au 12 participeront aux épreuves écrites et orales. Les examens de langue tamoule ne seront complets qu'après la participation à ces deux épreuves.

**Les élèves qui s'inscrivent à des niveaux autres que le niveau 1 doivent avoir réussi le niveau précédent.**

### Les épreuves orales

Les épreuves orales se dérouleront comme suit :

- Du niveau 1 au niveau 12 : compréhension orale, expression orale, lecture
- Niveaux 11, 12 : expression orale, lecture

**Dates des épreuves orales**

- Samedi **02-05-2026**
- Dimanche **03-05-2026**
- Dimanche **10-05-2026**

Les épreuves orales se dérouleront en un seul jour pour chaque candidat selon l'horaire qui lui sera communiqué par l'Association Tamoulcholai.

**Il est impossible de modifier le jour, l'heure ou le lieu de ces épreuves.**

### Épreuve écrite

**Samedi 06-06-2026**

L'épreuve écrite se déroulera le même jour à des horaires différents pour les élèves des niveaux 1 au 12. Les informations concernant l'heure et le lieu de l'épreuve seront communiquées ultérieurement via la convocation à cette épreuve.

### 02. Date limite d'inscription

**Samedi 18-01-2026**

### 03. Frais d'examen

| | |
|---|---|
| Niveau 1 au 4 | **45 €** |
| Niveau 5 au 12 | **55 €** |

### 04. Obtenir et remplir le formulaire d'inscription

**04-A. Pour les candidats libres ayant participés à l'examen général-2025**

Pour les élèves ayant participé et réussi l'examen général 2025, le formulaire d'inscription à l'examen général 2026 a été envoyé à leur domicile, accompagné du bulletin de réussite de l'année précédente. De même, le formulaire d'inscription à l'examen général 2026 a été envoyé aux élèves qui n'ont pas pu se présenter à l'examen précédent, ainsi qu'à ceux qui ne l'ont pas réussi. À la réception de ce formulaire, les candidats doivent vérifier leur identité et les autres informations ; en cas d'erreur, ils doivent effectuer les corrections au stylo rouge, puis indiquer clairement le niveau de langue, le mode de paiement des frais d'examen et signer.

**04-B. Pour les candidats candidatant pour la première fois :**
Vous pouvez récupérer le formulaire d'inscription au bureau de l'association ou le télécharger sur notre site internet **www.tamoulcholai.fr**. Le formulaire d'inscription doit être rempli au **stylo bleu ou noir**. Vous devez y joindre une photo récente du candidat ainsi qu'une photocopie de son acte de naissance ou de sa pièce d'identité afin de justifier son âge.

## 05. Envoi du formulaire

Vous pouvez remettre le formulaire au bureau de l'association ou l'envoyer par voie postale. Si vous le déposez directement au bureau, veuillez tenir compte des horaires d'ouverture. Les frais d'inscription peuvent être réglés en espèces, par chèque ou par carte bancaire.
Si vous envoyez le formulaire par voie postale, veuillez joindre un chèque à l'ordre de **TAMOULCHOLAI ASSOCIATION**, ainsi qu'**une enveloppe timbrée (20 g) portant votre adresse**. Un courrier confirmant la réception de votre formulaire vous sera ensuite envoyé.
**Tout formulaire non complet ne sera pas accepté.**

## 06. Envoi des convocations

Les convocations pour les épreuves orales et écrites vous seront envoyées séparément par voie postale **avant le 17/04/2026**. **L'Association Tamoulcholai ne pourra être tenue responsable des délais postaux ou d'une éventuelle perte de courrier.** Si vous n'avez pas reçu vos convocations avant le 17/04/2026, veuillez contacter le bureau : une copie vous sera remise.

## 07. Carnet d'examen

Les candidats s'inscrivant pour la première fois aux examens de langue tamoule peuvent récupérer leur carnet d'examen au bureau lors du dépôt de leur dossier. Ils peuvent également l'obtenir au centre d'examen lors des épreuves orales. Ce carnet doit être conservé et utilisé jusqu'à l'obtention du niveau 12. Le carnet d'examen coûte deux euros (2 €).

## 08. Uniforme pour les examens

Les candidats doivent se présenter aux épreuves vêtus de l'uniforme de l'association **(pantalon noir et chemise blanche)**.

## 09. Modalités du centre d'examen

Les candidats doivent se présenter **30 minutes** avant les épreuves orales et **45 minutes** avant les épreuves écrites, munis de leur convocation et vêtus de leur uniforme.
**Les candidats se présentant plus de 30 minutes** après le début des épreuves écrites ne seront pas admis dans la salle.

## 10. Préparation des élèves aux examens

Toutes les épreuves seront basées sur les manuels, les livres d'exercices ainsi que les CD. Les élèves peuvent se préparer en téléchargeant les annales des années précédentes ou en les récupérant au bureau de l'association.

## 11. Résultats des examens

Les résultats des examens vous seront envoyés au plus tard le 31/08/2026. Vous pouvez déposer un recours contre ces résultats à l'aide du **« formulaire de recours » [TE-26-11]** avant le 30/09/2026. Les frais de recours s'élèvent à 30 € par élève. Les résultats de ce recours vous seront communiqués avant le 31/10/2026. En cas de modification des résultats à la suite du recours, les frais de recours vous seront remboursés.

## 12. Certificats des examens

Pour les élèves ayant réussi les examens 2026, leur certificat sera envoyé, accompagné du formulaire d'inscription aux examens 2027, au plus tard le 13/12/2026. Pour les élèves ne s'étant pas présentés aux épreuves ou n'ayant pas réussi, seul le formulaire d'inscription aux examens 2027 leur sera transmis.

**TAMOULCHOLAI ASSOCIATION**
**165 boulevard de la Villette, 75010 Paris.**
**09 84 06 38 83** **tamoulcholai@yahoo.fr** **www.tamoulcholai.fr**
Horaires d'ouverture : du mercredi au dimanche de 14h30 à 19h30

த.தே-2026-03(உ)

# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - **2026**

## தனித்தேர்வர்களுக்கான தேர்வு விண்ணப்பம்

தெளிவாக, தனித்தனி எழுத்துகளால் நிரப்பவும். விண்ணப்ப முடிவுநாள் : 18-01-2026

நிழற்படத்தை இங்கே ஒட்டவும்.

| | | |
|---|---|---|
| 1 | குடும்பப் பெயர் | |
| | பெயர் | |
| 2 | Nom en Français | |
| | Prénom en Français | |
| 3 | பிறந்த நாள் | நாள் / மாதம் / ஆண்டு |
| 4 | பாலினம் | ஆண் / பெண் |
| 5 | பிறந்த இடம் | |
| 6 | முகவரி | Chez / Bat / Esc |
| | | N° et Rue |
| | | Code Postal / Ville |
| 7 | தொலைபேசி-வீடு | |
| | அலைபேசி | |
| 8 | மின்னஞ்சல் | |
| 9 | விண்ணப்பிக்கும் வகுப்பு | வளர்தமிழ் 1 2 3 4 5 6 7 8 9 10 11 12 |
| 10 | முன்னர் தேர்விற்கு விண்ணப்பித்திருப்பின் | இறுதியாக விண்ணப்பித்த ஆண்டு: ___ பள்ளி: ___ |
| | | கோவை எண்: ___ சுட்டெண்: ___ |
| | | பெறுபேறு: ___ |
| 11 | கட்டண முறை | காசு / காசோலை / வங்கியட்டை / வங்கிப்பரிமாற்றம் |
| 12 | காசோலை எண் | |
| | வங்கி | |

மேற்படி தரவுகள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் எனவும், தேர்வு நெறிமுறைகளை நான் அறிந்துள்ளதோடு அவற்றை ஏற்று நடப்போம் எனவும் உறுதியளிக்கிறோம்.

| **மாணவர் கையொப்பம்** | **நாள்** | **பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம்** |
|---|---|---|
| | | |

## பணியகப் பாவனைக்கு மட்டும்

| | | | |
|---|---|---|---|
| பெற்றுக்கொண்டவர் | | பெற்றுக்கொண்ட தொகை | |
| நாள் | | சிட்டை எண் | |

குறிப்பு :


**TAMOULCHOLAI ASSOCIATION**

165 boulevard de la Villette, 75010 Paris.

09 84 06 38 83 tamoulcholai @yahoo.fr www.tamoulcholai.fr

பணியக நேரம் : புதன் முதல் ஞாயிறு வரை 14.30 தொடக்கம் 19.30 வரை


**நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்**

TE-2026-03(E)

# ASSOCTAION TAMOULCHOLAI - FRANCE

## EXAMENS DE LANGUE TAMOULE - 2026

## FORMULAIRE D’INSCRIPTION POUR CANDIDATS LIBRES

**À remplir clairement et en lettres détachées. Date limite d’inscription : 18-01-2026**

| | | | |
|---|---|---|---|
| 1 | Nom en Tamoul | | Coller la photo ici |
| | Prénom en Tamoul | | |
| 2 | Nom en Français | | |
| | Prénom en Français | | |
| 3 | Date de naissance | jour / mois / année | |
| 4 | Sexe | M / F | |
| 5 | Lieu de naissance | | |
| 6 | Adresse | Chez / Bat / Esc | |
| | | N° et Rue | |
| | | Code Postal / Ville | |
| 7 | Tél. fixe | | |
| | Tél. mobile | | |
| 8 | Email | | |
| 9 | Niveau | Niveau de tamoul 1 2 3 4 5 6 7 8 9 10 11 12 | |
| 10 | En cas de candidature antérieure aux examens | Année de la dernière candidature | |
| | | École | |
| | | N° étudiant | |
| | | N° de référence | |
| | | Résultats | |
| 11 | Moyen de paiement | Espèce/ Chèque / Carte bancaire/ Virement bancaire | |
| 12 | Chèque N° | | |
| | Banque | | |

J’atteste que les informations fournies ci-dessus sont exactes et certifie avoir pris connaissance du règlement des examens, que j’accepte.

| | | |
|---|---|---|
| | | |
| **Signature du candidat** | **Date** | **Parents / Représentant légal** |

## Réserver à l’association

| | | | |
|---|---|---|---|
| Reçu par | | Montant reçu | |
| Date | | N° de reçu | |

Fwpg;G :


Tamoulcholai Association

**165 boulevard de la Villette, 75010 Paris.**

**09 84 06 38 83 tamoulcholai @yahoo.fr www.tamoulcholai.fr**

**Horairesd’ouverture : du mercredi au dimanche de 14h30 à 19h30**


**NOTRE LANRACINE DE NOTRE BIEN ÊTRE**

# தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2026

## புலன்மொழிவளத் தேர்வு தொடர்பான வழிகாட்டி

## கேட்டல் :

**வளர்தமிழ் 1 - 10 வரையான மாணவர்கள்** ஒலிக்கவிடப்படும் பகுதியைக்கேட்டு, அது தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

## பேசுதல் :




**வளர்தமிழ் 1 :** படம் கொடுக்கப்பட்டு, அப்படத்திலிருந்து ஏதாவது இரு சொற்களும் நான்கு வினாக்களும் கேட்கப்படும்.

**வளர்தமிழ் 2 :** படம் கொடுக்கப்பட்டு, அப்படத்திலிருந்து ஏதாவது நான்கு சொற்களும் நான்கு வினாக்களும் கேட்கப்படும்.

**வளர்தமிழ் 3, 4, 5 : 'பேசுதல் 3-4-5'** நூலில் இருந்து, அந்தந்த வகுப்புகளுக்குரிய கீழ்க்காணும் ஐந்து தலைப்புகளும் மாணவருக்கு தெரியாதவாறு கவிழ்த்து வைக்கப்படும். மாணவர், அத்தலைப்புகளில் மூன்றை எடுத்து, அம்மூன்றில் ஒன்றைத் தெரிவு செய்து, அது தொடர்பாக இரண்டு மணித்துளிகள் பேசுதல் வேண்டும்.




| வளர்தமிழ் 3 | வளர்தமிழ் 4 | வளர்தமிழ் 5 |
|---|---|---|
| மயில் | செவ்வரத்தம் பூ | பனைமரம் |
| தென்னை | அம்மி, ஆட்டுக்கல், உரல் | இசைக்கருவிகள் |
| எறும்பு | கரும்பு | அஞ்சலகம் |
| கிளி | தேனீ | கங்காரு |
| கதிரவன் | நண்டு | உழவர் |

### வளர்தமிழ் 6, 7, 8, 9, 10 :

ஆறு பாடநூல் தலைப்புகளும், ஆறு பொதுத் தலைப்புகளும் மாணவருக்குத் தலைப்பு தெரியாதவாறு கவிழ்த்து வைக்கப்படும். மாணவர் இருவகைத் தலைப்புகளிலும் இவ்விரண்டை எழுமாறாக எடுத்து, அவற்றில் விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்து, அது தொடர்பாக 2-3 மணித்துளிகள் பேசுதல் வேண்டும். பேசுதலுக்கு அணியஞ் செய்ய ஒரு மணித்துளி வழங்கப்படும்.

| வளர்தமிழ் 6 | |
|---|---|
| பாடநூல் தலைப்பு | பொதுத்தலைப்பு |
| மாமன்னன் எல்லாளன் | கோடைகாலம் |
| பாரிமகளிர் | சோமசுந்தரப்புலவர் |
| ஊக்கமும் உயர்ந்த உள்ளமும் | பறவைகள் |
| தமிழர் பண்பாடு | திருகோணமலை |
| சுற்றுலா | ஆடிப்பிறப்பு |
| தமிழீழநாடும் விடுதலைப் போராட்டமும் | பூங்கா |

| வளர்தமிழ் 7 | |
|---|---|
| பாடநூல் தலைப்பு | பொதுத்தலைப்பு |
| கயிலைவன்னியன் | கடல்வாழ் உயிரிகள் |
| நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் | சின்னத்தம்பிப்புலவர் |
| இலக்கிய இன்பம் | பலசரக்குகள் |
| ஆறுவது சினம் | மட்டக்களப்பு |
| வீரஞ்செறிந்த வன்னி மண்ணும் தமிழரசுகளும் | தைப்பொங்கல் |
| தலையைக் காத்த தமிழ் | உண்மையின் உயர்வு |

| வளர்தமிழ் 8 | |
|---|---|
| **பாடநூல் தலைப்பு** | **பொதுத்தலைப்பு** |
| பண்டாரவன்னியன் | உழவுத் தொழில |
| தைப்பொங்கல் | அன்னை பூபதி |
| தமிழுக்குத் தந்த கனி | மரங்களைக் காப்போம் |
| தமிழ் இலக்கிய வளம் | மன்னார் |
| காட்டு மல்லிகை | தமிழர் கலைகள் |
| காளமேகப் புலவர் | தாயிற் சிறந்த கோவிலும் இல்லை |

| வளர்தமிழ் 9 | |
|---|---|
| **பாடநூல் தலைப்பு** | **பொதுத்தலைப்பு** |
| இலங்கையின் முதற்குடிகள் | இன்சொல் பேசுவோம் |
| மீண்டும் தொடங்கும் மிடுக்கு | ஈகி திலீபன் |
| சாகா வாழ்வு பெற்ற சங்கிலி மன்னன் | ஒழுக்கத்தின் மேன்மை |
| தாயின் தாலாட்டு | யாழ்ப்பாணம் |
| தமிழின் காவலர் தனிநாயகம் அடிகளார் | விருந்தோம்பல் |
| போர்த்துக்கேயர் இலங்கையில் வேரூன்றிய வரலாறு | முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் |

| வளர்தமிழ் 10 | |
|---|---|
| **பாடநூல் தலைப்பு** | **பொதுத்தலைப்பு** |
| சேரமான் வஞ்சினம் | இயற்கைப் பேரழிவுகள் |
| இயற்கை இன்பம் | அறிவியலும் தொழில் நுட்பமும் |
| தமிழர் இடப்பெயர்வும் புலப்பெயர்வும் | வள்ளுவரும் குறட்பாக்களும் |
| நடுகல் | வன்னி |
| வில்லுப்பாட்டு | மூத்தோர் சொற்கேட்டல் |
| இலங்கைத்தீவின் விடுதலையும் ஈழத்தமிழர் வாழ்வும் | அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு |

### வளர்தமிழ் 11, 12 :

மூன்று பாடநூல் தலைப்புகளும், மூன்று பொதுத் தலைப்புகளும் மாணவருக்கு உள்ளடக்கம் தெரியாதவாறு கவிழ்த்து வைக்கப்படும். மாணவர் இருவகைத் தலைப்புகளிலும் ஒவ்வொன்றை எழுமாறாக எடுத்து, அவற்றில் விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்து, அது தொடர்பாகக் குறிப்பிட்ட நேரத்திற்குப் பேசுதல் வேண்டும்.

## வாசித்தல் :








**வளர்தமிழ் 1 - 12** வரையான மாணவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் பகுதியை வாசித்துக் காட்டுதல் வேண்டும். **'வளர்தமிழ் 1-2-3-4 வாசிப்போம்'**, **'வளர்தமிழ் 5-6-7-8 வாசிப்போம்'**, **'வளர்தமிழ் 9-10-11-12 வாசிப்போம்'** ஆகிய நூல்கள் அந்தந்த வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்த உதவும்.

**Tamoulcholai Association**
165 boulevard de la Villette, 75010 Paris.
09 84 06 38 83 tamoulcholai@yahoo.fr www.tamoulcholai.fr

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்